<u>பத்திரிக்கைச் செய்தி</u>

இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களின் உத்தரவுப்படி 11.10.2021 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விழுப்புரம் பிரிவு அலுவலர்கள் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து, கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் உளுந்தூர்பேட்டை வனவர் அலுவலகத்திலிருந்து வெளியே வந்த வனவர் திரு.சங்கர்கணேஷ் என்பவரிடமிருந்த பையை சோதனை செய்தபோது பையில் ரூ.11.64 லட்சம் இருப்பது தெரியவந்தது, இந்த நிகழ்வை பற்றி மேற்படி வனவரிடம் விசாரணை செய்ய இந்த தொகையானது புதுக்கோட்டை வனத்தோட்ட கழகத்தில் மண்டல மேலாளராக பணிபுரிந்து வருபவரும், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு விழுப்புரம் மாவட்ட வனத்தோட்ட கழக மண்டல மேலாளராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்தவருமான திரு.நேசமணி என்பவர்க்கு தங்களது வனசரகங்களில் மரக்கன்று உற்பத்தி மற்றும் பராமரிப்பு பணிக்கான சிறு வன குத்தகைதாரர்களால் செய்யப்படும் பணிகளுக்கு விடுவிக்கப்பட்ட நிதியில் 25 சதவீத தொகையை கமிஷனாக வசூலித்து கொடுப்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். மேற்படி பணத்தினை பெற்றுக்கொள்ள திரு.நேசமணி, புதுக்கோட்டை வனத்தோட்ட கழக மண்டல மேலாளரர் Mahindra ALTURAS TN 44 BX 7609 என்ற வாகனத்தில் உளுந்துார்பேட்டை பைபாஸ் ஜங்ஷன் ரவுண்டானா அருகில் பாலத்தின் கீழ் வந்து திரு.சங்கர் கணேஷிடம் மேற்படி லஞ்ச பணம் ரூ.11,64,500/- யை பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களால் அவரையும் அவருடைய வாகனத்தையும் சோதனை செய்தபோது அதிலிருந்து ரூ.24லட்சம் ரொக்கம் கைபற்றப்பட்டது, மேற்படி வாகனத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ரொக்கம் ரூ.24லட்சம் பற்றி விசாரணை செய்ய, இத்தொகையானது புதுக்கோட்டை, காரைக்குடி மற்றும் அறந்தாங்கி மண்டலங்களில் மர கன்று உற்பத்தி மற்றும் பராமரிப்பு பணிக்கான சிறு வன குத்தகைதாரர்களால் செய்யப்படும் பணிகளுக்கு அரசால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து அவருக்கு 25 சதவீதம் கமிஷனாக கிடைத்த தொகையாகும் என கூறினார். மேற்படி சோதனையில் கைபற்றப்பட்ட மொத்த தொகை ரூ.35.64 லட்சம் ஆகும். மேற்படி சோதனை சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திரு.நேசமணியின் இல்லத்தில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் காட்டப்படாத பல லட்சம் மதிப்புள்ள சொத்து ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

**PRESS NOTE**

On 11.10.2021 on credible information received by the DVAC Villupuram Detachment that forester Tr.Shankar Ganesh of Ulundurpet division is collecting monthly commission amount from the contractors who have been doing, works in 1) Pagandai, 2) Thyagadurgam 3) Sankarapuram and 4) Thirukkovilur ranges under the Tamil Nadu Forest Plantation Corporation Schemes. The amount collected is intended to be handed over to the Regional Manager, Tamil Nadu Forest Plantation Corporation of Pudukkkottai who held additional charge for Villupuram District two months back.

Based on the information a joint surprise check with District Inspection Cell Officer was organized. The team reached Ulundurpet, where the office of Tr.Shankar Ganesh is located, surprised him when he was leaving in a two wheeler from his office at 13.00 hours. An amount of Rs.11.64 lakhs collected from the contractors of said ranges was seized from him. From statement of Tr.Shankar Ganesh it was ascertained that the money was collected from the farming contractors of the ranges mentioned above as 25% commission for the contracts awarded and bills sanctioned to them. Further, the collected money is intended to be handed over to Tr.Nesamani, Regional Manager who is expected to arrive at Ulundurpet in the evening. Based on his statement the team waited for the arrival of Tr.Nesamani. When the team surprised the vehicle Mahindra ALTURAS TN 55 BX 7609 of Tr. Nesamani and conducted search, an unaccounted amount of Rs.24 lakhs was seized. Tr.Nesamani was enquired and he admitted the fact that he had collected the amount as commission for him from the contractors doing plantation work in Karaikudy, Aranthangi and Pudukottai ranges and that he came to Ulundurpet for collecting the commission amount from Tr.Sankar Ganesh. Totally Rs.35.64 lakhs was seized. A case has been registered in this connection. In this connection, house Search was conducted at the residence of Tr.Nesamani, Pudukkottai and unaccounted property documents worth in several lakhs were seized.

